## மாநிலசெய்திகள்

## தமிழ்நாடு

### செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் : 11 ஆண்டுகளாக இயக்குநர் இல்லாமல் செயல்படுகிறது

- செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் துவங்கி 11 ஆண்டுகள் முடிந்தும் அதற்கு நிரந்தர இயக்குநர் இன்னும் நியமிக்கப்படாமல் உள்ளது. இதனால், அந்த நிறுவனம் முடங்கி உள்ளது.
- மத்திய அரசின் செம்மொழி பட்டியலில் 2004-ம் ஆண்டு தமிழ் மொழி இடம்பெற்ற பின் அதன் வளர்ச்சிக்காக 2007-ல் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னை தரமணியில் துவக்கப்பட்டது. இதை நிர்வகிக்கும் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் அதற்கு ஒரு நிரந்தர இயக்குநரை நியமிக்காததால் அதில் முறையான கவனம் செலுத்தாமல் இருப்பதாகப் புகார் எழுந்துள்ளது.

## குஜராத்

### குஜராத்தில் 'உலகின் மிகப்பெரிய சூரிய மின்சக்தி பூங்கா'

- உலகின் மிகப்பெரிய 5000 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி பூங்கா குஜராத்தில் அமைக்கப்பட உள்ளதாக குஜராத் முதல்வர் விஜய் ரூபானி இன்று தெரிவித்தார்.
- தோலெரா சிறப்பு முதலீட்டு மண்டலத்தில் அமைக்கப்பட உள்ள இந்த பூங்கா ரூ .25,000 கோடி முதலீட்டில் பணிகள் தொடங்கப்பட உள்ளன.20ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும் விதத்தில் உருவாக்கப்படுகிறது.

## தேசியசெய்திகள்

### பொதுமக்களின் குறைகளை உடனடியாகத் தீர்க்கும் வகையில் ஆன்லைன் கண்காணிப்புத் தகவல் பலகையை டாக்டர். ஜிதேந்திர சிங் தொடங்கிவைத்தார்

- நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறை உருவாக்கிய ஆன்லைன் தகவல் பலகையை புதுதில்லியில் மத்திய பணியாளர் நலன்,

பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத்துறை இணையமைச்சர் (தனிப் பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்.

- பொதுமக்களின் குறைகளுக்கு உடனடியாகத் தீர்வுக் காண்பதையும், நடைமுறைச் சீர்திருத்தங்களின் முன்னேற்றத்தை அவ்வப்போது ஆய்வு செய்வதையும், இந்தத் தகவல் பலகை கண்காணிக்கும்.
- நடைமுறைச் சீர்திருத்தங்கள் மற்றும் அவற்றின் கண்காணிப்பு அளவுகள் உள்ளிட்டவை தகவல் பலகையில் அறிவிக்கப்படும். இத்தகைய சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணிக்கச் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு இது உதவும்.

**சட்டவிரோதமாகக் குடியேறியவர்களைத் திருப்பி அனுப்புவதற்காக இந்தியாவிற்கும், இங்கிலாந்து மற்றும் வட அயர்லாந்து நாடுகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

- புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, ராஜீய ரீதியான கடவுச்சீட்டு வைத்திருப்போர் விசா இல்லாமலேயே வந்து செல்வதற்கும், இங்கிலாந்திற்குச் சட்ட விதிமுறைகளின்படி, பயணம் செய்வோருக்கான விசா நடைமுறைகளைத் தளர்த்துவதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.
- ஒரு நாட்டைச் சேர்ந்தவர் மற்ற நாட்டில் தங்கியிருப்பதற்குச் சட்டப்பூர்வமான ஆதாரம் இல்லாமல் இருந்தால், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை மனதிருப்தி ஏற்படும் வகையில் ஆய்வு செய்த பின்னர் அவர்களைத் திருப்பிஅனுப்புவதை உறுதி செய்யும்.
- ஒரு நாட்டில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள மற்ற நாட்டவரை, குறிப்பிட்ட காலஅவகாசத்திற்குள் திருப்பிஅனுப்புவதற்கான நடைமுறைகளை முறைப்படுத்தவும் இந்த ஒப்பந்தம் உதவும்.

**இங்கிலாந்து:**

**தலைநகரம்** - இலண்டன்

**அரசி** - இரண்டாம் எலிசபெத்

**பிரதமர்** - தெரசா மே

**நாணயம்** - பிரித்தானிய பவுண்டு

## இந்தியாவில் இருந்து 2025-ம் ஆண்டில் ரூ.35 ஆயிரம் கோடி ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதிக்கு இலக்கு

- இந்திய பாதுகாப்பு உற்பத்தியாளர்கள் 2025-ம் ஆண்டில் ரூ.35 ஆயிரம் கோடிக்கு ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகின்றனர்.
- மத்திய அரசின் 'இந்தியாவில் தயாரிப்போம்' (மேக்கிங் இந்தியா) திட்டத்தின் கீழ் ராணுவத்துறைக்கு தேவையான அனைத்து தளவாட பொருட்களையும் நம் நாட்டிலேயே தயாரிக்க முடிவு செய்து உள்ளது.
- இதன் மூலம் தற்போது ராணுவ தளவாடங்களை பொறுத்தவரையில் 300 மில்லியன் டாலர் அதாவது ரூ.1,949.67 கோடி மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.
- இந்த கண்காட்சி மூலம் ராணுவ தளவாடங்களை காட்சிப்படுத்துவதன் மூலம் 2025-ம் ஆண்டு ரூ.35 ஆயிரம் கோடிக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சர்வதேசிய செய்திகள்

## இந்தியா - ஜாம்பியா இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின

- அரசுமுறைப் பயணமாக ஜாம்பியா நாட்டுக்கு சென்றுள்ள ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் முன்னிலையில் இந்தியா - ஜாம்பியா இடையே இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு உள்ளிட்ட 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. நீதித்துறை ஒத்துழைப்பு, அதிகாரிகள் மற்றும் தூதர அதிகாரிகளுக்கு பரஸ்பர விசா சலுகை உள்ளிட்ட ஒப்பந்தங்கள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் முன்னிலையில் கையெழுத்தானது.

**ஜாம்பியா:**

**ஜனாதிபதி** - எட்கர் லுங்கு

**தலைநகரம்** - லுசாகா

**நாணயம்** - ஜாம்பியன் கவாச்சா

## சிரியாவில் அமெரிக்க உளவு விமானங்களை ஸ்தம்பிக்க வைக்கும் கருவிகளை ரஷியா அமைத்தது

- அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்கும் மோதல் வலுத்துவரும் நிலையில் சிரியா வான் எல்லைக்குள் நுழையும் அமெரிக்க உளவு விமானங்களை ஸ்தம்பிக்க வைக்கும் கருவிகளை ரஷியா அமைத்துள்ளது.

## வணிகசெய்திகள்

## இந்தியாவில் கூகுள் ஹோம் அறிமுகம்

- குரல் வழியாக தேடுபொறி வசதியை அளிக்கும் கூகுள் அசிஸ்டென்ஸ் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆண்ட்ராய்டு செயலி வசதி கொண்ட போன்களில் கூகுள் ஓகே செயலி கிடைக்கும் என கூகுள் அறிவித்துள்ளது.
- தேடுபொறி சேவையில் அடுத்த கட்டமாக உலகம் குரல் வழி சேவைக்கு சென்று கொண்டிருக்கிறது. அதற்கு கூகுள் அசிஸ்டென்ஸ் கருவி உதவும். எழுத்துகளின் உதவியில்லாமல் தேட உதவும் என்றார்.

## விளையாட்டுசெய்திகள்

## காமன்வெல்த் 2018 - ஷ்ரேயாசி சிங் துப்பாக்கி சுடுதலில் தங்கப்பதக்கம் வென்றார்

- காமன்வெல்த் விளையாட்டு போட்டி மகளிருக்கான டபுள் டிராப் பிரிவு துப்பாக்கி சுடுதலில் இந்திய வீராங்கனை ஸ்ரேயாஸி சிங் தங்கப் பதக்கம் வென்றார்.

## காமன்வெல்த் 2018: துப்பாக்கிச்சுடுதல் போட்டியில் இந்திய வீரர் அங்கூர் மிட்டல் வெண்கலம் வென்றார்

- ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் போட்டியின் துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீரர் அங்கூர் மிட்டல் வெண்கலப்பதக்கம் வென்றார்.